
என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

**151** வது இதழ் பேரூர் ஆதினம் கருத்துடன்


December 2015 FREE ISSUE



# லண்டன் தமிழ் தகவல்

## London Tamil's Information


தரமான பொருள்கள் வாங்க




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

**லட்சுமி ஜுவலர்ஸ்**

276 High Street North London E12 6SA UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிதம்பரம் நடராஜா கோவில் மார்கழி மாதம் ஆருத்திரா தரிசனம் திருவிழா ௯ நாட்கள் நடைபெறும். இந்த ௯ நாட்களில் மிகப்பெரிய ருத்திரா அபிஷேகம் நடைபெறும். இந்த ருத்திரா அபிஷேகத்துக்கு 1 இலட்சம் வரையில் செலவாகும். தேருக்கு முதல் நாள் சாவகச்சேரி மட்டுவில் அன்பர் ஒருவர் உபயத்தில் நடந்த ருத்திரா அபிஷேகத்துகான படத்தை மேலே காணலாம்.

நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்


திருவள்ளுவர் ஆண்டு 2046
கார்த்திகை
மலர் : 13
இதழ் : 151
டிசம்பர் - 2015



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ் அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


நல்ல சோறு சாப்பிட AMIRTAA அரிசி வாங்குங்கள்

UNLEASH
THE POWER OF GOLD
THARANI
JEWELLERY & PAWNBROKERS
UK'S CHEAPEST GOLD LOANS
STARTING FROM 2.95% PER MONTH
GOLD
LOANS
THE CHEAPEST GOLD
LOAN PROVIDEDR IN WEMBLEY

* NO Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
* Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our Loans.
* Loans Aqainst Gold from 2.95% per Month, it's U.K's lowest Rate for Gold Loans.
* Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
* No Credit Check Required
* Simple Procedure. Loan sanctioned in Just 5 Minutes.

Our Rates of Interest
£100 to £4999 2.95 % Per Month
APR 38.7%

Loan Term: Up to 6 Months
Documents Required
Photo ID - Passport or UK Driving Licence
Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months

Terms and Conditions
The maximum loan term is for 6 months. If loan cannot be repaid during this period, a renewable can be made, after interest on the loan is paid in full.
If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time,we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstandings The pledge


வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம் வழங்கும்

# திருக்குறள் போட்டி



தினம் ஒரு திருக்குறள், 365 தெரிவு செய்யப்பட்ட குறள்கள் மனப்பாடம் செய்து தமிழர் தகவல் மூலம் தெரியப்படுத்தினால் - சிறப்பு பரிசாக

**முதல் பரிசு**
பவுன் 200.00

**இரண்டாம் பரிசு**
பவுன் 100.00

**மூன்றாம் பரிசு**
பவுன் 50.00




**365 அடங்கிய**
திருக்குறள் புத்தகத்தை போட்டியில் கலந்து கொள்பவர்கள்


## இலவசமாக

பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புக்கு: தமிழர் தகவல்
லண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Krishna
RESTAURANT



TAKEAWAY
MENU

10% OFF on all takeaway's
for order more than £10

T: 0208 756 1162
www.krishnarestaurantlondon.co.uk

PRIVATE PARTY
HALL AVAILABLE
Over 25 seats capacity

700, Uxbridge Road, Hayes, UB4 ORX
T: 0208 756 1162
E: info@krishnarestaurantlondon.co.uk
www.krishnarestaurantlondon.co.uk

லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் உள்ள உறவுகளை வியப்பில் ஆழ்த்த மற்றும்
விரும்பும் உணவுகளை அன்பளிப்பாக இலங்கையில் உள்ள
இல்லங்களின் வாசல் சென்றடையும் துரித சேவை.
விரையுங்கள் www.orderfood.lk இணையதளத்துக்கு





# www.orderfood.lk

**Order foods & gifts for your friends & loved ones in Sri Lanka**
**Order online at www.orderfood.lk**

**Order from as little as £10**

**Get 10 % discount on your order.**




Promotion code: UK150630 Offer valid until: 30/06/2015

- கொழும்பு
- மட்டக்களப்பு
- யாழ்பாணம்
- திருகோணமலை
- கிளிநொச்சி
- வவுனியா
- மன்னார்

மேலும் விரைவில் பல இடங்கள்.




Available on the App Store

ANDROID APP ON Google play

உங்கள் தேவை எங்கள் சேவை
UK +44 (0)207 118 0550
SL +94 114 444 111

info@orderfood.lk
/orderfood
/orderfoodlk

நல்ல சோறு சாப்பிடவேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMIRTAA

AMIRTAA

## 'நல்ல சோறு'




லண்டனில்

**AMIRTAA**

பொன்னி புழுங்கல் அரிசி
விற்பனை ஆகும் இடங்கள்

**Harin Supermarket**
Eastham

**Best Food**
Wembley

**Katpakam**
Lewisham

**Best Food**
Hounslow

**Eelam Shop**
Catford

**Best Food**
West Croydon

**Krishna Stores**
Hayes


**Harrow Food & Wine**
Harrow

**Prime Food & Wine**
Tooting

**இப்பொழுது விற்பனையில்...**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதினத்துடன் உறவாடி இருக்கும் பாக்கியம்



லண்டனில் சில அரிய சாதனைகளுக்கு வித்திட்டவர். ந. சச்சிதானந்தம் அவர்கள் சைவக்கோயில் ஒன்றியத்தை ஆரம்பித்து அதன் முதல் மகாநாட்டுக்கு பேரூர் ஆதினம் தவத்திரு சாந்தலிங்க அடிகளாரை அழைத்து மகாநாட்டை சிறப்பாக நடத்தியவர். அந்த நாளிலிருந்து இன்று வரை அந்த ஆதினத்துடன் உறவாடி இருக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

அவரின் 91வது அகவை விழாவில் கலந்து கொண்டபின் இந்தமாதம் 21ம் தேதி பேரூர் ஆதினத்தில் அவரை சந்தித்து பேச முடிந்தது.

**தமிழர் தகவல் :** கார்த்திகை, மாத தமிழர் தகவல் இதழை அனுப்பி வைத்தேன் – வாசித்தீர்களா?

**ஆதினம் :** 150வது இதழாக இருந்தது. அதில் பல நல்ல கட்டுரைகள் குறிப்பாக கணித பஞ்சாங்கம் வாக்கியமா என்ற தலைப்பில் 4 கட்டுரைகள் சிறப்பாக இருந்தன. எங்கள் ஆதினத்துக்கு அந்த கட்டுரையில் ஆதங்கம் தெரிந்தது.

எமது ஆதினமும் வாக்கிய பஞ்சாங்க வழியில் தான் நிகழ்வுகளை நடத்துகிறது. எங்கள் தமிழ் நாட்டில் உள்ள சகல ஆதினங்களும் வாக்கிய பஞ்சாக அடிப்படையில் தான் நடைபெறுகிறது.

**தமிழர் தகவல் :** லண்டனில் ஒரு ஆலயத்தில் ஒரு நாளும் மற்றொரு ஆலயத்தில் அடுத்த நாளும் திருவிழாக்கள் நடைபெறுகிற, இந்த முறை சரியானதா? இதற்கு மாற்றாக எதுவும் செய்ய முடியாதா–

**ஆதினம் :** முடியும், 13 வருடங்களுக்கு முன்னாள் லண்டன் கோயில் ஒன்றிய மகாநாட்டுக்கு ஆதினம் கலந்து சிறப்புரை ஆற்றிய பொழுது இது பற்றி தெளிவான ஒரு கருத்தை முன் வைத்திருக்கிறேன்.

அதை நடைமுறைப்படுத்தினால் இந்தச் சிக்கல் வராது. உலகத்தில் உள்ள சைவ திருத்தலங்கள் ஆருத்திரா தரிசனம் என்றால் சிதம்பரம், கார்த்திகை தீபம் என்றால் திருவண்ணாமலை, சிவராத்திரி என்றால் திருவண்ணாமலை.

கந்த ஷஷ்டி என்றால் திருச்செந்தூர். இந்த ஆலயங்களில் இந்த விழாக்கள் நடக்கும் திகதியில் லண்டன் கோயில்களும் அந்த திகதியை பின்பற்றினால் எல்லாம் சுலபமாக இருக்கும். இதை பின்பற்ற இதை இந்தக் கோயில்கள் கவனிக்கவேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்.எஸ்.பிரியா சக்திவேல்

# சித்தர்கள்

## வழிநடத்தும் திருத்தலம் மகத்தான வாழ்வளிக்கும் மாசிமக நீராடல்

பிரளய காலம் என்பது ஒவ்வொரு யுகம் முடியும் தருவாயில் வரும். அப்படி க்ருத யுகம் முடிவடையும்போது வெள்ளம் பெருக்கெடுத்து பூமியைச் சூழ்ந்து கொண்டது. அப்போது படைக்கும் தொழிலை புரியும் பிரம்மன் உயிர்களையெல்லாம் சேர்த்து அமிர்தத்துடன் கலந்து ஒரு மண் பானையில் வைத்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை மாவிலை போன்ற திரவியங்களால் அலங்கரித்து, கலசபூஜை செய்து மகாமேரு மலை மீது வைத்தார்.

பிரளய வெள்ளம் அளவுக்கு அதிகமாய் பீறிட்டு ஜீவன்கள் நிரப்பப்பட்ட பானையை அடித்துக் கொண்டு பாரத நாட்டின் தென்திசையை நோக்கி மின்னல் வேகத்தில் வந்தது. தேவர்கள் சிவபெருமானைப் பிரார்த்தித்து ஜீவன்கள் அடைக்கப்பட்ட பானையை நிறுத்தும்படி வேண்ட, சிவனும் கிருதமூர்த்தி வடிவம் கொண்டு பாணம் ஒன்றால் அப்பானையை உடைத்தார். அப்படி அந்த கும்பம் என்ற பானை உடைந்து அதிலிருந்து அமிர்தமும் ஜீவன்களும் வெளிப்பட, மீண்டும் பூமியில் ஜீவராசிகள் உண்டாயின. இதனை அகத்தியர் தமது நாடியில்,

'பிரளய நீரில் நீந்திய ஜீவ கும்பத்தை
பாணமொன்றால் கயிலாயநாதன்
தகர்க்க கண்டோமே; அமிர்தமது நின்ற
துவித்தலமும் மகாமகமொடு
பொற்றாமரை பொய்கையானதே
சிவனே தன்னமிர்த கரத்தால்
கும்பத்தைக்கூட்டி
மலரசஞ்சாய்ந்து மணலிங்கமாக்கிட்டானே'

– என்கிறார்

ஆக, கும்பத்தில் இருந்த வெளிப்பட்ட அமிர்தமது இரண்டு இடங்களில் தேங்கி நின்றது. அதனையே மகாமகக் குளம் என்றும் பொற்றாமரைக் குளம் என்றும் நாம் போற்றி வணங்குகின்றோம். பிரம்மதேவரே இந்த கும்பேஸ்வரரை நிறுவினார்.

இங்குள்ள சிவன், கும்பத்தினாலும் மணல் மற்றும் தேன் கலந்து ஈசனே உருவாக்கியது என்று புலனாகிறது. மந்திர வடிவமாய் அன்னை மங்களாம்பிகை கோயில் கொண்டுள்ள புண்ணிய தலம் இது.

இந்தக் கலசத்தை அலங்கரித்த தேங்காய், மாவிலை யாவும் கூடி, தல விருட்சமான வன்னிமரமாக இன்றும் விளங்குகிறது. சனிதசை, ஏழரை சனி, அஷ்டம் சனி, கண்டக சனி போன்றவற்றின் உக்கிரம் தணிய இந்த வன்னிமரத்தடியில் வீற்றிருக்கும் கணபதியை வணங்கினால் உடனடி நிவாரணம் கிட்டும். இது கண்கண்ட உண்மை.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சூரியன் ஆட்சி வீடான சிம்மத்தில் குருபகவான் கொலுவிருக்க, மக நட்சத்திர தினத்தன்று மாசி மாதத்தில் மகாமக விழா கொண்டாடப்படுகிறது.

அன்றைய நாளில் குருபகவான் வேண்டுதலின்படி மகாமக குளத்தில் வாயுதீர்த்தம், கங்கா தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், யமுனை தீர்த்தம், குபேர தீர்த்தம், கோதாவரி தீர்த்தம், ஈசான தீர்த்தம், நர்மதா தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், இந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம், காவிரி தீர்த்தம், யம தீர்த்தம், குமரன் தீர்த்தம், நிருருதி தீர்த்தம், பேஸ்னி தீர்த்தம், தேவ தீர்த்தம், வருண தீர்த்தம், சரயு தீர்த்தம், கன்யா தீர்த்தம் போன்ற தீர்த்தங்கள் பூலோகத்தில் இருந்தும் தேவலோகத்தில் இருந்தும் வந்து சங்கமமாவதாக ஐதீகம்.


அப்படிப் புண்ணிய தீர்த்தங்கள் எல்லாம் கலந்த இத்திருக்குளத்தில் ஈசனே பத்துவிதமான வடிவங்களில் அருபமாய் நீராடுவார். அப்படி அவர் நீராடி மகிழ்கையில் அவருடைய வடிவங்களை தனது ஞானக்கண்ணால் கண்ட அகத்தியர் அத்திருக்கோலங்களை இப்படி வர்ணிக்கிறார்;

கோலமது ஐயிரண்டு ஆதிசிவனே
எடுத்து நீராடி நிற்கக் கண்டோமே
பிரம்ம முகுந்தனாயதனத்து விருக்ஷிபமென
பானீ கோணீ பக்தீயெனும்
பயிரவா வகஸ்திய
வயானேனென விளங்க – வானோரும்
வழிபட்டு தம் மெய் மறந்தனரே'

அதாவது திருமால் பத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழைத்துச் சென்று அந்த சந்நதியில் ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரத்தை ராமபிரானுக்கு உபதேசம் செய்து, பஞ்சமுகம் கொண்ட ருத்ராட்சம் ஒன்றை ராமனுக்கு தந்து ஆசி கூறினார்.

மூன்று முறை ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரத்தை பாராயணம் செய்து பின் ருத்ராட்ச பீடத்தை தியானித்து ராமபாணத்தை ராவணன் மேல் ஏவ, ராமனின் பக்கம் வெற்றி வர, ராவணனின் பத்துத் தலைகளும் தரையில் உருள மண்டோதரியின் மங்கலநாண் அறுந்தது என்கிறார் அகத்தியர் தன் நாடியில்.

அருணகிரண ஸ்தோத்திரந் தன்னுடனே
ருத்ராட்ச பீடணங்கூட்டி எய்த ராமபாணமதால்
மண்டோதரியின் மங்கல
நூலது எரிந்து சாம்பலானதே

- என்ற செய்யுள் அகத்தியர் நாடியுள் உண்டு.

எல்லாச் சித்தர்களும் தேவர்களும் நீராட விரும்பும் பொய்கை. இந்த மகாமகக் குளம் இதற்கு இணையான ஒரு பொய்கை ஈரேழு லோகங்களிலும் இல்லை.

வருகிற ஆண்டில் மகாமகத்திருவிழா வருகிறது. அப்போது அதில் நீராடி பெரும்பேறு எய்துவோம். அதற்குமுன், ஒவ்வொரு வருடம் மாசி மாதம் மக நட்சத்திர நாளன்றும் இந்தத் திருக்குளத்தில் நீராடி, ஈசனை வழிபட்டு, மகாமக நீராடலுக்கு அவரது அருளை வேண்டுவோம்.

வெற்றி மேல் வெற்றி பெற்று வாழ்வில் வளம் காண்போம்.

■

அவதாரங்கள் எடுத்து மனிதப் பிறவிப்படும் அவஸ்தைகளைப் பட்டார் என்று அறிகிறோம். ஆனால் அந்த தசாவதாரங்களைப் போலவே, ஈசனும் பத்து வடிவங்களாக உருக்கொண்டு மகாமகக் குளத்தில் நீராடி, தேவர்களையும் பிற அனைவரையும் மகிழ வைத்தார் என்று நாடி வாயிலாக அறிகிறோம்.

அன்று ஈசன் எடுத்த திருவுருவங்கள் பிரம்ம தீர்த்தீஸ்வரர், முகுந்தீஸ்வரர், தன ஈஸ்வரர், வ்ருஷப ஈஸ்வரர், பாநீஸ்வரர், கோணீஸ்வரர், பக்தீஸ்வரர் பைரவ ஈஸ்வரர், அகஸ்தீஸ்வரர், வியானேஸ்வரர் ஆகும்.

இந்த மூர்த்தங்கள் யாவும் அரை நொடியில் தோன்றி நீராடி மறையும் என்கின்றனர் சித்தர்கள். பொதிகை மலை செல்லும் வழியில் அகத்தியர் ராமபிரானை லக்குமணனுடன் சந்திக்கிறார். அனுமன் இந்தக் குள்ளமான முனிவன்தான் அகத்தியன என்று ராமனுக்கு அறிமுகப்படுத்தினார். வாட்டம் கொண்ட ராமபிரான் முகத்தை இந்த மகாமகக் குளக்கரையில் கண்ட அகத்தியர், அவரை ஆறுதல்படுத்த முயன்றார். குடமது உடைந்து ஜீவன் வெளிப்பட்ட இந்த இடத்தை ராமனுக்கு அகத்தியர் விளக்கி, இது குடம் உடைந்து நின்ற தலம் என்பதால் குடந்தை எனக்கூறி கும்பேஸ்வரரை வணங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலம் முட்டுக் கட்டையா? கவலை தேவையில்லை!

ஜோதிட நூல் ஆசிரியர் A. பிரகஸ்பதி M.A. B.L.
மேடவாக்கம், சென்னை, இந்தியா,
Cell (91) 9840550602, (91) 9952981683

பொதுவாக, மூலம் நட்சத்திரத்தில் ஒரு ஆணோ (அ) பெண்ணோ பிறந்தால், மாமனார்க்கு கெண்டம் என்கிற வதந்தி அன்று தொட்டு, இன்று வரை மக்கள் மத்தியில் ஒரு பெரும் பீதியை உருவாக்கி வருகிறது என்பது யாவரும் அறிந்ததே!

இதன் காரணமாக, மூலம் நட்சத்திரத்தில் பிறந்த பெண்ணையோ (அ) ஆணையோ யாரும் திருமணம் செய்ய முன் வருவதில்லை என்பது ஒரு வருந்தத்தக்க விஷயமாகும்.

இது போக, மூல நட்சத்திரத்தை 15 பாகமாக பிரித்து, ஆண் (அ) பெண் பிறந்த வேளை 1வது பாகமானால் தகப்பனுக்குக் கெண்டம், 2வது பாகமானால் தகப்பனுடைய சகோதரனுக்குக் கெண்டம், 3க்கு சகோதரியின் புருஷனுககுக் கெண்டம், 4க்கு தகப்பன் வழிபாட்டனுக்குக் கெண்டம், 5க்கு தாய்க்குக் கெண்டம், 6க்கு தாயின் சகோதரிக்குக் கெண்டம், 7க்கு தாயின் சகோதரனுக்குக் கெண்டம். 8க்கு தகப்பனின் சகோதரனின் மனைவிக்குக் கெண்டம், 9க்கு சர்வமும் நாசம், 10க்கு கால்நடை நாசம், 11க்கு வேலையாட்கள் நாசம், 12க்கு பிறந்தவருக்குக் கெண்டம், 13க்கு மூத்த சகோதரனுக்குக் கெண்டம், 14க்கு சகோதரிக்குக் கெண்டம், 15க்கு தாய்வழி பாட்டனுக்குக் கெண்டம் என்பது நமது முன்னோர்களது வாக்காகும்.

ஆனால், இது நட்சத்திர ரீதியான தோஷமாகும். இந்தப்பலன் அவரவர் ஜாதகத்தில் உள்ள கிரக நிலைகளுக்கேற்ப வித்தியாசப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, 'மூலம்' என்றாலே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாமனார்க்கு ஆபத்து என்பது எல்லோரும் பயப்படக்கூடிய ஒரு விஷயமாகும். ஆனால், ஒரு பெண் (அ) ஆண் ஜாதகத்தில் 3மிடம் தான் மாமனாரைக் குறிக்கும் ஸ்தானமாகும். இந்த 3-மிடத்தில் சனி, ராகு, கேது, போன்ற பாவிகள் இருந்து, 3ஆம் அதிபதியும் பகை, நீசமடைந்து, பாவிகளுடன் கூடியிருந்தால், அந்த ஜாதகர் (அ) ஜாதகிக்குத் திருமணமாகி ஓரிரு ஆண்டுகளில் மாமனார்க்கு மாரகம் உண்டாக்கும். இந்த ஜாதகர் (அ) ஜாதகி மூலம் தவிர வேறு எந்த நட்சத்திரத்தில் பிறந்திருந்தாலும், மேற்கூறியவாறு மாரகம் உண்டாகும் என அறியவும்.

அதே சமயம், 3-மிடத்தில் குரு, சுக்கிரனி போன்ற சுபர்கள் நிற்க, (அ) பார்க்க 3-ஆம் அதிபதியும் ஆட்சி, உச்சமடைந்து, சுபர் பார்வை (அ) சேர்க்கையுடன் இருக்க, இவர்களுக்கு 7ஆம் அதிபதி (அ) சுக்கிரன், குரு முதலானோரின் பார்வையோ (அ) சம்பந்தமோ இருந்தால், அந்த ஜாதகர் (அ) ஜாதகி மூலத்தில் பிறந்திருந்தாலும் அவரது மாமனார் 80 வயது வரை தீர்க்காயுசுடன் சிறப்பாக வாழ்வார்! எனவே, மூலம் நட்சத்திரம் கண்டு, யாரும் பயப்பட வேண்டாம் என்பது எமது அறிவுறையாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீதானம் நமக்குப் பிரதானம்

– லேனா தமிழலவன்

எத்தனை முறை அவசரப்பட்டு முடிவு எடுத்திருக்கிறோம்! அதற்கான தண்டனையை எத்தனை முறை அனுபவித்திருக்கிறோம்! ஆனாலும் நாம் சாமானியத்தில் மாறுவதே இல்லை. இதை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டாமா? எந்த ஒரு பிரச்சனையென்றாலும் அதற்கு முரட்டுத்தனமான முடிவையே முதலில் மேற்கொள்கிறார்கள் சிலர். வேறு வழியே இல்லாவிட்டால் கடைசிப் பாணமாக இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்க்கையில்
தேவையைக்
குறைத்துக் கொண்டு
சமாளித்தால்
நீ புத்திசாலி
தேவையை
அதிகரித்துக் கொண்டு
அதைச் சமாளிக்க
முடிந்தால்
நீ திறமைசாலி**

வைத்துக் கொள்ளலாம் என்று ஏனோ இவர்களுக்குத் தோன்றுவது இல்லை.

ஒரு பிரச்சனை வந்ததுமே இதைத் தீர்க்கவும் இதிலிருந்து விடுபடவும் என்னென்ன வழிகளெல்லாம் சாத்தியம் என்று ஒரு மனிதன் சிந்திக்கத் தொடங்குவானேயானால் அவன் தான் புத்திசாலி! தோன்றிய பத்து யோசனைகள் எங்கெங்குப் போய் முட்டி நிற்கும் என மறுப்பு அசைபோட்டு, அவற்றை ஒவ்வொன்றாகக் குறைத்துக் கொண்டே வந்து, கடைசியாக, இரண்டு அல்லது மூன்று தீர்வு தான் இதற்கு இருக்க முடியும் என்கிற நிலை நமக்கு வரவேண்டும். அவற்றுள் எது சிறந்ததோ அதை நடைமுறைப்படுத்த வேண்டும். உடம்பில் கொசு உட்கார்ந்ததும், அதைப் பட்டென்று அடிப்பது போல் ஒவ்வொரு விஷயத்திலும் பட்டென்று முடிவு எடுத்தால் அதனால் வரும் தொல்லைகள் முன்னிலும் பலம் திரண்டு நிற்கும். பிரச்சனைக் கோட்டைகளிலிருந்து வெளியே வர ஒரே வழிதான் இருக்கிறது என்று நம்புகிறார்கள். தங்கள் கருத்தைத் தயவு செய்து மாற்றிக் கொள்ளட்டும். நான்கு புறங்களிலும் வழிகள் இருக்கின்றன. அவற்றுள் எது ஆபத்துக் குறைவான வழியோ அதைத்தான் யோசித்து அறிந்து தேர்ந்தெடுத்து விடுகிறார்கள். சற்றே சுற்றிப் போனாலும் பரவாயில்லை என்று நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டியது முக்கியம். பரபரப்பு அடைவதாலும் அவசரப்படுவதாலும் வேலையும் ஆவதில்லை.

தப்பித் தவறி ஆகிய வேலையும், ஆபத்தாகவோ, அபத்தமாகவோ தான் இருக்கும். இந்தப் பரப்பரப்பிலும் குழப்பத்திலும் இருப்பவர்கள் தாம்.

“எனக்கு ஒண்ணுமே புரியலை” என்றும், “எனக்குக் கையும் ஓடலை. காலும் ஓடலை!” என்றும் புலம்புகிறார்கள்.

இது கூடத்தேவலை. சிலர் நிதானத்தை இழக்கும்போது நாம் என்னசெய்கிறோம், என்ன சொல்கிறோம் என்பது கூடத் தெரியாதவர்களாக இருக்கிறார்கள்.

தோன்றியதைச் செய்து விடுவோம். அப்புறம் வருவது வரட்டும்! என்கிற மனநிலையும் தவறு. எப்பேர்ப்பட்ட சூழ்நிலையானாலும் செயலாலும், சொல்லாலும் நிதானத்தை இழந்து விடக்கூடாது. நிதானத்தை இழக்காதவார்கள் மற்ற அனைத்தையும் காப்பாற்றத் தெரிந்தவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூணாவிலூர் **கா. விசயரத்தினம்**
**(இலண்டன்)**

# இயற்கையோடு ஒட்டியதே மனித வாழ்வு



இயற்கை என்ற பதத்திற்குப் பிரபஞ்சம், ஆற்றல், இயற்சக்தி, இயலுலகு, இயற்கை நிலை, இயற்கை மரபு, இயல் நடைமுறை, இயலாற்றல், இயலாட்சி, இயல்நிலை ஒழுங்கு, இயல்பு, இயலுணர்ச்சிப் பண்பு, குணம், உயிராற்றல், ஆடையற்ற நிலை, இயல் வளர்ச்சித் திறன், இயல் வாய்மை, இயல்பான தன்மை, உள்ளார்ந்த பண்பு, உள்ளுரம், மனப் பண்பு, இயல்புடையோர், வகை, மாதிரி, தன்மை, தரம், தர அளவு, வகைத் திறன், உள்ளாற்றல், உயிரியக்கம், மூல இயற்கை நிலை, மர உணவுச் சாறு, சாவு, மாழ்வு போன்ற கருத்துக்களை அகராதி அடக்கி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை என்பது மனித முயற்சியால் உண்டாக்கப்படாததும், தானாகவே காணப்படுவதுமாம். மனித ஆற்றல் இயற்கையைக் கட்டுப்படுத்த முடியாது. இயற்கைக்கு அபார சக்தி உண்டு. இயற்கையின் ஆதியந்தம் புரியாதவிடத்து, இயற்கைதான் கடவுள் என்று கூறி நழுவி விடுவோர் பலர். கடவுள்மேற் பாரம் போட்டதும் கதை முடிந்து விடுகின்றது.

பரந்து விரிந்திருக்கும் பிரபஞ்ச வெளியிற் காணப்படும் சூரியன், சந்திரன், பல கோடி நட்சத்திரங்கள், ஒன்பது பெரும் கிரகங்கள், பற்பல சிறு கோளங்கள், நம் கண்ணுக்குத் தோன்றாத நூற்றி எழுபத்தைந்து (175) சந்திரன்கள், கோடிக்கணக்கான கற்பாறைகள் ஆகியவை அந்தரத்தில் சுழன்றுகொண்டும், ஒவ்வொன்றின் ஈர்ப்புத் தன்மையால் மிதந்த வண்ணமுள்ளன. இவை யாவும் இயற்கையன்னையின் வரம்புக்குள் அடங்குகின்றன.

மேலும், பூமி, தானாகவே தோன்றும் மழை, மின்னல், இடி முழக்கம், நெருப்பு, காற்று, எரிமலை, பூகம்பம் ஆகிய இயற்கைச் சக்திகளும், மலை, நீர் வீழ்ச்சி, அருவி, கடல், தாவரம், பறவை, விலங்கு, மனிதன், மற்றைய உயிரினங்கள், ஐந்திணைகள், பெரும் பொழுது, சிறு பொழுது, பூமியில் அமைந்த இயற்கைக் காட்சிகள் அனைத்தும் இயற்கையின் பிரதிபலிப்பேயாம். இயற்கைக் காட்சிகளைப் பார்த்து, இன்புற்று, மயங்கிப் பாத்தொடுத்து நிற்கும் பாவலரும், நாவலரும் தமிழ்த் தாயின் கணக்கிலடங்காப் புதல்வர்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர்கள் தாம் எழுதும் நூலில் முதற்கண் கடவுளரை நினைந்து, அவர் பாதம் தொழுது, கடவுள் வாழ்த்தோடு நூலை எழுதி முடிப்பது ஒரு மரபு.

தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் வேங்கடமலை, குமரியாறு, கடல் போன்ற இயற்கையை முன்நிறுத்திப் பாயிரம் அமைத்தமை நோக்கற்பாலது.

"வடவேங்கடந் தென்குமரி........
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம்
நிறைந்த......."

திருவள்ளுவர் யாத்த திருக்குறளில், நூலறிவால் செயலைச் செய்யும் வகைகளை அறிந்த போதிலும், உலகத்தின் இயற்கையை அறிந்து அதனோடு பொருந்துமாறு செய்ய வேண்டுமென்று இயற்கையை முன்னிலைப்படுத்திக் கூறுகின்றார்.

"செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல்."
(குறள் 637)

இன்னும், சிலப்பதிகாரத்தை யாத்த இளங்கோ அடிகளார், மேலும் ஒரு வித்தியாசமான மாறுபட்ட முறையில் திங்கள், ஞாயிறு, மாமழை ஆகிய இயற்கையை முன்வைத்துக் கடவுள் வாழ்த்து அமைத்தமை காண்க.

"திங்களைப்
போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!
ஞாயிறு
போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!
மாமழை
போற்றுதும்! மாமழை போற்றுதும்!"

இற்றைக்கு 20 இலட்சம் ஆண்டுகளுக்குமுன் முதல் மனிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியில் தோன்றினான். அப்பொழுது பூமியில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த தன் மூத்த பிறப்பான ஒரு சில விலங்குகளையும், பாம்பினங்களையும் கண்டு, பயந்து, ஒதுங்கி வாழ்ந்தான். காலப் போக்கில் தன் விடாமுயற்சியினால் அவற்றைத் தூரத் துரத்தி ஆதிக்கத்தைத் தனதாக்கிக் கொண்டான். ஆனால், தனக்குப் புரியாத ஒரு சில இயற்கை நிலைகளைக் கடவுளாக மதித்து, வணங்கி, காணிக்கையும் செலுத்தி வந்தான். இவ்வண்ணம், சூரியன், சந்திரன், கோள்கள், கடல், ஆறு, உச்சி மலை, எரிமலை, பூகம்பம், கடற்கோள், சூறாவளி, தீ போன்றனவற்றை வணங்கி வருகின்றான். பாம்பையும் வணங்கிப் பால் கொடுத்தும், புற்றில் பால் வார்த்தும், வணங்கி வருகின்றான். ஈண்டு அவனுக்கு இயற்கை கடவுளானமை கண்டீர்.

இயற்கை இன்றேல் உலகம் இல்லை: மனிதன் இல்லை: உயிரினங்கள் இல்லை: செடி, கொடி, பூண்டு, மரம் முதலியனவும் இல்லை. இயற்கையான சூரியன், நீர், காற்று ஆகியன இல்லையெனின் உலகில் உயிரினங்கள் வாழ்தலரிது. சூரியன் நமக்கு வெளிச்சத்தையும், சக்தியையும், உணவையும் தருகின்றான். நீர் நம் தாகத்தைத் தீர்க்கின்றது: நல் விளைச்சலைத் தந்து, மக்கள் பசியைத் தணிக்கின்றது. காற்றைச் சுவாசித்து உயிர் வாழ்கின்றோம்.

இயற்கையின் நடுநாயகமாகத் திகழ்பவன் சூரியனே. சூரியன் இல்லாவிடில் உலகம் இருள் மயமாகி உறைநிலையடைந்துவிடும். இயற்கை எனக் கூறப்படும் சூரியனின் வாழ்நாள், ஆயிரம் (1,000) கோடி ஆண்டுகள் என்பது விஞ்ஞான ஆய்வாளர் கருத்தாகும். இற்றைவரை சூரியன் நானூற்றி அறுபது (460) கோடி ஆண்டுகள் வாழ்ந்து விட்டான். இன்னும் ஐந்நூற்றி நாற்பது (540) கோடி ஆண்டுகளின்பின், சூரியன் பாரிய பிரகாசமடைந்து, வெடித்துச் சிதறி இறந்து விடுவான். இயற்கைக்கும் மிக நீண்ட வாழ் நாள் உண்டென அறிக.

அப்பொழுது சூரியனுக்கு அண்மையிலுள்ள புதன், சுக்கிரன் ஆகிய இரு கிரகங்களும் நீராவியாகிக் கரைந்து விடுவர். அதே சமயம் நாம் வாழும் பூமியும் எரிந்து சாம்பலாகிவிடும். மற்றைய ஆறு கிரகங்களும் செயலிழந்து விடுவர். இஃது ஓர் உலக அழிவாயமையும். இதைப் பிரளயம் எனலாம். இதையடுத்து ஒரு புது யுகம் தோன்றும்.

இயற்கை உலகில் வாழ் உயிரினங்களுக்கு அதிக நன்மைகளைத் தந்து உதவுகின்றது. அதே சமயம் இயற்கை தரும் தீங்கும், அவலங்களும் கணக்கிலடங்கா. சூரிய வெப்பம் தாங்க முடியாது மக்கள் ஆண்டுதோறும் மடிகின்றனர். கடற்கோள் இடைக்கிடை தோன்றி மக்களையும், மண்ணையும் ஏப்பம் விடுகின்றது. காட்டுத் தீயாலும், நெருப்பாலும் ஏற்படும் அழிவுகள் கணக்கிடமுடியாதவை. சூறாவளி, எரிமலை, பூகம்பம் ஆகியனவும் மக்களை வாட்டி வதைக்கின்றன. இவ்வாறான அழிவுகளுக்கு நாம் கடவுள்மேல் பாரம் போட்டு நிம்மதி அடைகின்றோம். இதைவிட மனிதனால் என்னதான் செய்ய முடியும்? நாம் பிறந்து, வாழ்ந்து, இறப்பதும் இயற்கை நியதியாம்.

மாமுனிவர்கள் உச்சி மலையிலும், காட்டிலும், மர நிழலிலும் இருந்து தவம் புரிந்து இயற்கையோடு இணைந்து வாழ்ந்து, காய் கனி உண்டு, நீண்ட ஆயுள் பெற்று மக்களை ஆத்மீகத் துறையில் வழி நடத்தினர். நாமும் இயற்கையோடு ஒட்டி வாழ்ந்து பேரின்பம் அடைவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பாக நடந்த சிறுமி சிவகாமியின் அரங்கேற்றம்

சமீபத்தில் சிறுமி சிவகாமி சிபி இன் சங்கீத அரங்கேற்றம் பாரதிய வித்யபவனில் வெகு சிறப்பாக நடந்தேறியது. சிவகாமி தன் இசையாலும் குரலாலும் மொத்தச் சபையோரையும் கட்டிப் போட்டார். முகத்திலே அமைதியும் அடக்கமும் நிறைந்து இருந்த குழந்தை சிவகாமி தமிழ் உச்சரிப்பு சிறிதும் பிறழாமல் தன் சொல்லிசையால் அனைவரையும் சுண்டி இழுத்தார். இசையார்வம் நிறைந்த குழந்தை சிவகாமியைப் பெற்றோர் சிறந்தவொரு குருவைத்தேடி 3 வயதில் இசைகற்கக் கொண்டு சென்று பாரதிய வித்யபவனில் சேர்த்தனர்.

குழந்தையின் குரு ஸ்ரீமதி சிவசக்தி சிவநேசன் அவர்கள் தனது செய்தியில் சிறுபராயத்தில் சிவகாமி தன்னிடம் துருதுருவென்ற விழிகளுடன் புன்முறுவல் பூத்த வண்ணம் மிகுந்த ஆர்வத்துடன் இசை கற்க வந்ததாகவும், மிகவும் கீழ்ப்படிவுடன் தான் எது சொன்னாலும், பிகுபண்ணாமல் உடனேயே மனனம் பண்ணிவந்து ஒப்புவிப்பதாகவும் அவளுக்குப் பாடம் எடுப்பது ஒரு சந்தோசமான அனுபவம் என்றும் கூறியுள்ளார். குரு 13 வயதில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடன அரங்கேற்றம் செய்தது போலவே சிவகாமியையும் 13 வயதில் இசை அரங்கேற்றம் செய்யும் அளவிற்கு வளர்த்துவிட்டிருந்தார். இளம் பராயத்தில் சங்கீத கலாரத்தினம் சங்கீத விதூஷகி என்ற Awardsகளையெல்லாம் தட்டிக் கொண்ட ஸ்ரீமதி சிவசக்தி சிவநேசன் அவர்கள் D.K. ஜெயராமன், K.V. நாராயணசாமி, T.V. கோபாலகிருஷ்ணன், Dr. பாலமுரளிகிருஷ்ணா ஆகியோரிடமெல்லாம் தான் கற்ற கல்வியை முழுமனதுடன் கற்பித்து குழந்தையை அசத்தும்படி செய்தால் என்றால் அது மிகையாகாது.

குருவை அதிகம் விமர்சிக்க வேண்டுமா?


மலரின் மணத்திற்கும் தேனின் இனிமைக்கும் விளம்பரம் தேவையில்லை, எனினும் சிறந்த குருவிடம் குழந்தையை 3 வயதில் இசை கற்பிக்க வழிவகுத்த பெருமை சிவகாமியின் பெற்றோர்களாகிய ரமணியையும், சிபியையுமே சாரும். பிரதம விருந்தினராக வந்திருந்த Dr. John Marr சிவகாமியின் இசையில் தான் அப்படியே லயித்துப் போனதாகவும் கல்பனாஸ்வரங்கள் பாடும்போதெல்லாம் தாளக்கணக்குத் தப்பாமல் தடுமாற்றம் எதுவும் இல்லாமல் இருந்ததாகவும் அவரின் Maths அறிவையும் பாராட்டினார். Dr. John Marr லண்டனில் இருந்து 19 வயதில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்குச் சென்று இசை கற்ற ஆங்கிலேயர் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். சிவகாமி பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன் சிறப்பாகப் பாடிக் குருவுக்கும் தன் பெற்றோருக்கும் பெருமை சேர்த்தாள் என்று கூறவும் வேண்டுமா? மிருதங்கிவத்துவான் Sri. M. பாலசந்தர், வயலின் வித்துவான் Sri ஞான சுந்தரம், Sri கந்தையா சிதம்பரநாதன் கடம், செல்வன் பிரசன்னா தேவராஜா மோத்ஷிங் இவர்களுடன் ஈடு கொடுத்து இச்சிறுமி பாடினார் என்றால் அவரின் கடின உழைப்புக்கு நாம் தலைசாய்த்துத்தான் ஆகவேணும். Dr. பாலமுரளிகிருஷ்ணா முன்னிலையில் அரங்கேற்றம் செய்த செல்வி சங்கரி ராஜேந்திரன் தம்புரா இசைத்தார். சங்கரியும் சிவகாமியின் குருவிடமே இசை பயின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. குழந்தை சிவகாமி இசையில் பல உயரங்களை அடைய வாழ்த்துவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கச்சி ஒரு ஜென் குரு


– சுகி. சிவம்



"உங்களை எப்படியாவது லண்டனுக்கு அழைக்க வேண்டும் என்று என் நண்பர் சிவானந்த ஜோதி விரும்புகிறார். விசாவுக்கு ஏற்பாடு செய்வோமா?"! என்று தென்கச்சி சுவாமிநாதனிடம் கேட்டேன். இப்படி ஒரு செய்தி சொன்னதுமே லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் குளிரால் கஷ்டப்படுவதுபோல் என் சக பேச்சாளர்கள் பரபரத்து விடுவார்கள். சிறிதும் சலனமின்றி, "வானொலியில் இன்னும் இரண்டு வருஷம் இருக்கு. முடியட்டும். அதுக்குள்ள வெளிநாடு போகனும்னா டெல்லிக்கு எழுதி அனுமதி வாங்கணும். அதில இரண்டு வருஷம் போயிடும். ரிடையர்ட் ஆயிட்டுப் போறேனே!" என்று சலனமில்லாமல் சொன்னார் தென்கச்சி. ஒரு ஜென் குரு போலவே மனதளவிலும் பரபரப்பில்லாத அனுபவ ஞானி தென்கச்சி.

பொதுவாக அவரைப் பேச அழைத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பணம் வாங்கமாட்டார். முழுநேர பணியாக அதை வைத்திருக்கும் நான், "நீங்கள்லாம் பணம் வாங்காம பேசறதால எங்களுக்குக் குடுக்கக் கஷ்டப்படறாங்க. கறாரா காசு கேட்கலாமில்ல!" என்று விளையாட்டாகச் சண்டை போட்டேன். "காதைக் கிட்ட கொண்டாங்க. யாரும் கொடுக்கிறதில்ல... கொடுக்கிறதாவும் இல்ல. இதுக்கு நாமளா பெருந்தன்மையா வேண்டாம்னுட்டா ஒரு மரியாதை கிடைக்குமில்ல!" என்று சிரித்தார். ஆனால் உண்மையில் அவருக்குப் பணத்தின்மீது ஆர்வமில்லை. ஒரு விழா மேடையிலிருந்து இறங்கும்போது, அவரிடம் வழிச்செலவுச் சன்மான கவரைக் கொடுத்தார் அமைப்பாளர். தம்மைச் சூழ்ந்திருந்த இரசிகர்களிடம், "இந்த ஊர்ல ஏதானும் அநாதை இல்லம் இருக்கா?!" என்று கேட்டார். கூட்டத்தில் முன்பின் தெரியாத நபர். "ஆம்! இருக்கே!" என்று இல்லத்தின் பெயர் சொன்னதும் அந்தக் கவரை அவர் கையில் கொடுத்து, "இங்க நன்கொடையா குடுத்துடுங்க!" என்றபடி காரில் ஏறிக் கொண்டார். சக பேச்சாளர் ஒருவர், "அந்த ஆளு குடுப்பார்னு என்ன நிச்சயம். நானே வைச்சுகிட்டா...?!" என்று இழுத்தார். "அவரு ஒரு அநாதைன்னு அர்த்தம்... இல்லாதவங்களுக்குத்தானே குடுக்கறோம். நம்ப வேலை சரியா முடிஞ்சா சரித்தான்!" என்று எந்தச் சலனமுமின்றி அடுத்த விஷயத்திற்குப் போனார் தென்கச்சி. நான் சந்தித்த மனிதர்களில் என்னை அதிகம் பாதித்தவர்களில் அவர் ஒருவர்.

எதையுமே வித்தியாசமாகச் சொல்லிப் பழக்கப்பட்டவர் அவர். ஒரு பெரிய மனிதரின் 80ஆவது விழாவில் பேசும்போது, "நமக்கு இவ்வளவு வயசாயிடுச்சே என்று வருத்தப்படக்கூடாது. இப்படி வருத்தப்பட வாய்ப்பே இல்லாமல் பலரு சீக்கிரமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிடறாங்க!" என்று தன் உரையை ஆரம்பித்தார். ஒரு முறை ஆஸ்த்மா விழிப்புணர்வு விழாவில் பேச மருத்துவர் வற்புறுத்தினார். "நான் ஏதாவது விபரீதமா பேசிட்டா என்னா பண்றது. வேண்டாமே!" என்றார். வற்புறுத்தி அழைத்தேன். பேசத் தொடங்கியவர், திடீர் என்று, "நிறைய புஸ்தகம் படிக்கறதால, விஷயங்கள் சேகரிக்கிறதாலே நான்



ரொம்பக் கஷ்டப்படறேன். அதுல போட்டிருக்கிறதெல்லாம் உண்மையா பொய்யான்னு தெரிஞ்சா இன்று ஓர் தகவல்ல சொல்லலாம். மண்ணெண்ணெய் குடிச்சா ஆஸ்த்மா போயிடும்னு படிச்சேன். இது சரியா தப்பான்னு நம்ப டாக்டர் யாருக்காவது குடுத்துப் பார்த்து... இல்லாட்டி குடிச்சுப்பாத்து என்கிட்ட சொன்னா நான் பலபேருக்குச் சொல்லுவேன்!" என்று விஷமமாக மருத்துவரைப் பார்த்தார்.

கவுரவம் பார்க்க மாட்டார். கர்வம் கிடையாது. எளிமையாகப் பழகுவார். வெளியே தெரியாமல் நிறையப் பேருக்கு உதவுவார். கூச்ச சுபாவம் உடையவர்.

"நானாக என்ன எழுதிவிட்டேன். பலரும் பல காலங்களில் சொன்னதைத் தானே தொகுத்துச் சொல்றேன்"! என்று பணிவுடன் புகழை மறுதலிப்பார். ஆனால் அது ஆராயப்படவேண்டியது. வால்மீகியின் இராமாயணத்தைத்தான் கம்பர் எழுதினார் என்றாலும், கம்பரைப் பார்த்தால் வால்மீகி எவ்வளவு வியப்பார். எவ்வளவு மதிப்பார் என்பது புரிந்தால், தென்கச்சியின் பெருமை புரியும். பழைய தங்கம் புதிய நகை என்கிற பாணியில் பழசைப் புதுசாக்கிய தென்கச்சியின் சாதனை ஆழமானது. இளைய தலைமுறைக்கு இனிக்க இனிக்க நீதி சொன்னது சாதாரணச் சாதனையா என்ன! அமெரிக்காவில் அவர் போன்றவருக்கு டாக்டர் பட்டம் மட்டுமல்ல, பல்கலைக்கழகத்தில் புதுத்துறை வகுத்துப் பதவி தந்திருப்பார்கள்.

சிங்கப்பூரில் ஒரு முறை பேசப் போனோம். டிக்கெட் போட்டுக் கூட்டம் நடத்திய பெண்மணிக்கு, "சார்ஸ் வைரஸ் பரவலால்' பணம் கஷ்டம். எங்களுக்குப் பணம் கொடுக்கும் போது புலம்பினார். சன்மானத்தைக் குறைத்துத் தர எங்கள் உதவி கேட்டார். தென்கச்சி சார், "அதெல்லாம் இல்ல. என்னால ஒன்னும் பண்ண முடியாது!" என்று ஒரு Pass கொடுத்துவிட்டு, "வேணும்னா ஊர்ல போயி நிலத்தை வித்து ஏதாவது அனுப்பி வைக்கிறேன்!" என்றார். தென்கச்சி கதை சொல்லி அல்ல. கண்முன்பாக நான் கண்ட ஒரு ஜென்குரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாட்ஸப் வசிஷ்டர் சொல்கிறார்

வாழ்க்கை குத்துச்சண்டை போன்றது. நீங்கள் விழும்போது தோற்றதாய் அறிவிக்கப்படுவதில்லை. எழ மறுக்கும்போதுதான் தோற்றவராய் கருதப்படுகிறீர்கள்!

பக்தி கலக்கும்போது

| | |
|---|---|
| உணவு | பிரசாதமாகிறது |
| பட்டினி | விரதமாகிறது |
| தண்ணீர் | தீர்த்தமாகிறது |
| இசை | கீர்த்தனமாகிறது |
| இதயம் | கோவிலாகிறது |
| செயல் | சேவையாகிறது |
| பயணம் | யாத்திரையாகிறது |
| மனிதன்.... | புனிதனாகிறான்! |

மற்றவர்களிடம் சவால் விடும்போது
தோற்கவும் வாய்ப்பிருக்கிறது
நம்மிடமே வார்த்தைகள் அச்சத்தைத் துடைக்கும்
வெற்றி மட்டும் நகர்கிறது.

சிறிய அணைப்புகள் கண்ணீரைத் துடைக்கும்
சிறிய மெழுவரத்திகள் இருட்டைத் துடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய வார்த்தைகள் அச்சத்தைத்
துடைக்கும்
சிறிய மாற்றங்கள் குறைகளைத்
துடைக்கும்

பிரார்த்தனை செய்யும் முன் நம்புங்கள்
பேசும்முன் கேளுங்கள்
செலவு செய்யும்முன் சம்பாதியுங்கள்
எழுதும்முன் சிந்தியுங்கள்
கைவிடும்முன் முயலுங்கள்
இறக்கும்முன் வாழுங்கள்


- ரத்தன் டாடா

குழந்தைகளிடம் கற்றுக்கொள்ள 3 விஷயங்கள்

- காரணமே இல்லாமல் மகிழ்ச்சியாய் இருப்பது
- எப்போதும் எதையேனும் செய்து கொண்டிருப்பது
- அகங்காரம் இல்லாமல் கேட்டுப்பெறுவது.

பலவீனமானவர்கள்
பழிவாங்குகிறார்கள்!
பலம் பொருந்தியவர்கள்
மன்னிக்கிறார்கள்.
புத்திசாலிகள்
மறக்கிறார்கள்.

- நன்றி
நமது நம்பிக்கை



## நம்பிக்கை மூளை

பிரெஞ்சுதேசப் பிரதமர் ஒரு முறை நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். "நீங்கள் பண்புள்ள மனிதர்களிடம் மட்டுமே பழகுகிறீர்கள். தவறான குணம் கொண்டவர்களைப் பெயருக்காக வேணும் பழகலாமே. அரசியலில் இது அவசியம்தானே" என்றார். அதற்குப் பிரதமர் சொன்னார். "பெரிய மனிதர்கள் பெருமைக்குரிய குணங்களை வெளிப்படுத்துவார்கள். சமரசம் கருதிப் பழகினாலும் அவர்கள் நட்பு சிரமங்களையே ஏற்படுத்தும்" என்றார்.

**சுகிசிவம்**

**உலகத்தமிழர்களின்**
**உள்ளம் வெல்லும் உரையாளர்!**
**வெற்றி வாசலில்**
**விதம் விதமாய்**
**விருந்துகள் படைக்கும்**
**பேச்சாளர்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*படித்ததில் பிடித்தது!!!*

நல்ல நிர்வாகம் என்பது
வயிறுபோல்
இருக்க வேண்டும். அது
சீராக
இயங்கும்வரை அப்படி
ஒன்று இருப்பதே
உங்களுக்குத் தெரியாது.
— யாரோ

## நம்பிக்கை ஊளை

படித்ததில் பிடித்தது!!!
ஞாபக மறதிக்கு சிகிச்சை
எப்போது தேவை தெரியுமா?
நேற்று உங்கள் மனைவியின்
பிறந்தநாள் என்பது இன்று
நினைவுக்கு வரும்போது.....
— மரியோ ரோக்கோ

## நம்பிக்கை ஊளை

படித்ததில் பிடித்தது!!!
நீண்டதூரம் நடப்பது ஆயுளை
வளர்க்கும்
என்பது எனக்கும் தெரியும் என்
பாட்டி 60 வயது முதல் தினமும்
ஐந்து கிலோ மீட்டர் நடப்பார்.
இப்போது வயது 97. ஆனால்
எங்கிருக்கிறார் என்பதுதான்
தெரியவில்லை.
— எலன் டீ ஜெனசீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு முறை, மதுரை மீனாட்சியம்மன் கோவில் வளாகத்தில், திருநாவுக்கரசரின் பெருமை பற்றி சொற்பொழிவு நிகழ்த்தி கொண்டிருந்தார் வாரியார் சுவாமிகள்.

'மெய்யன்பர்களே...

திருச்சிற்றம்பலத்தானின் திருவிளையாடல் காரணமாக, சைவ சமயத்திலிருந்து, சமண மதத்திற்கு போன திருநாவுக்கரசர், பின், சூலைநோயால் பாதிக்கப்பட்டு, உடல் துடித்து, மனம் நொந்து போனார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாரியாரின் வாக்கு வன்மை!

'உடனே தன் சகோதரி திலவதியைக் காண புறப்பட்டு சென்றார். கண்டார் சகோதரியை; சொன்னார் சூலை நோய் பற்றி! தந்தார் அவர் திருநீறு; அதை நெற்றியிலும், நெஞ்சிலும், பின், உடல் முழுவதும் பூசி கொண்டவர், சிறிது வாயிலும் இட்டுக் கொண்டார்.

'மறு நாள் காலை, மாயமாய் மறைந்து போயிற்று சூலைநோய்! நீறணிந்த நிமலனை, நினைந்து நினைந்து நெஞ்சம் நெக்குருகினார். சமணமத்தை விட்டார். சிவாலயங்களை செப்பனிடும் திருப்பணி மேற்கொண்டார். பதிகங்களால் சிவபெருமானை பாடினார். அவர் நாவன்மையும், சிவத்தொண்டும் நாடெங்கும் பரவ, நாவுக்கரசர் புகழ் ஓங்கியது.

'இது பொறுக்காத சமணர்கள், மன்னன் மகேந்திரவர்ம பல்லவனிடம், நாவுக்கரசரை பற்றி, பொய்யான செய்திகள் சொல்லி, அவரை கொல்ல வேண்டுமென்று தூபம் போட்டனர்.

'ஆராய்ந்தறியாத அரசனும், அவர்களின் சூது வார்த்தையை நம்பி, நாவுக்கரசரை, சுண்ணாம்பு காளவாயில் தள்ள உத்தரவு பிறப்பித்தான். நாவுக்கரசரோ, கனம் கக்கும் சுண்ணாம்பு காளவாயில் சம்மணமிட்டு அமர்ந்தார். சிவயோகத்தில் ஆழ்ந்தார். எரியும் காளவாய், பன்னீர் சொரியும் பசுஞ்சோலையாக குளிர்விக்க, நெஞ்சம் குழைந்த நாவுக்கரசர், 'மாசில் வீணையும், மாலை மதியமும், வீசுதென்றலும்' என்று பதிகம் பாடி, பக்தி பரவசமானார்.

'அக்காட்சியை கண்டு திடுக்கிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன், உணவில் விஷம் வைத்து கொல்ல ஆணையிட்டான். ஆலகால விஷத்தையே உண்ட, நீலகண்டனின் தொண்டரான நாவுக்கரசர், ‘இதையும் ஒரு கை பார்ப்போம்...’ என்று, விஷ உணவை விருந்தாகச் சுவைத்து உண்டு, ஏப்பம் விட்டார்.

‘இதை பார்த்து, திகைத்துப் போன அரசன், யானை காலால், நாவுக்கரசர் தலையை இடற கட்டளையிட்டான். யானையோ, தவம் செய்து சிவப்பழமாக காட்சி தரும் நாவுக்கரசரை, வலம் வந்து, அவர் முன், மண்டியிட்டது.

‘இதைக்கண்டு அதிர்ந்து போன அரசன், நாவுக்கரசரை கல்தூணில், சங்கிலியால் பிணைத்து, நடுக்கடலில் கொண்டு போய் மூழ்கடிக்குமாறு காவலர்களை ஏவினான். அவர்களும் அப்படியே செய்தனர். நாவுக்கரசர் சற்றும் நடுக்கம் கொள்ளாமல், ‘சொற்றுணை வேதியன் சோதியானவன்....’ என்று பதிகம்பாட, அவர் பக்தியின் சக்தியால், இரும்பு சங்கிலிகள் மலர் சரங்களாக மாறின. கல்தூண் கனமற்ற தக்கையாகி, பின் படகாக உருவெடுக்க, அதில் ஏறி, கரை ஒதுங்கினார்.

‘நாவுக்கரசரின் அரும்பெரும் சக்தியை அறிந்த அரசன், தன் தவறை உணர்ந்தான். திரும்பவும், சைவ சமயத்திற்கு திரும்பினான். என்னே என் தலைவர் திருநாவுக்கரசரின் பக்தி! அதன் சக்தி....’ என்று வாரியார் சுவாமிகள், மனம் மகிழ்ந்து சொல்லி கொண்டிருக்கையில், நாத்திக இயக்கத்தை சேர்ந்த அன்பர் ஒருவர் எழுந்து, ‘சரி உங்க தலைவர் மாதிரி, உங்களையும் கல்லோடு சேர்த்து கட்டி, இந்த கோவில் பொற்றாமரை குளத்திலே தூக்கி போட்டுடலாம். உங்க தலைவர், திருநாவுக்கரசு மாதிரி, அவர் தொண்டர் நீங்க தப்பித்து வர்றீங்களான்னு பார்க்கலாமா....’ என்று கேட்க, சபையோர் திடுக்கிட்டு போயினர்.

ஆனால், வாரியார் சுவாமிகள் நிதானமாக, ‘அப்படியா... சரி... என் தலைவர் இருக்கட்டும்; உன் தலைவர் யாரு? அவர் மதுரைக்கு வந்திருக்காரா... அவர் வந்தா, அவருக்கு நீ என்ன செய்வே?’ என்று கேட்டார். அந்த நாத்திக அன்பர், ‘எங்க தலைவர் மதுரைக்கு வந்தா, அவருக்கு மாலை மரியாதை செய்வது தான் என் முதல் வேலை. அன்றைக்கு பூக்கடையிலே மாலையே கிடைக்காது; எல்லாருமே தலைவருக்கு மாலை வாங்கிப் போடுவதற்காக, போட்டி போட்டு வாங்கிட்டு போயிடுவாங்க...’ என்றார்.

‘தலைவருக்கு மாலை மரியாதை செய்கின்றனரே.... அவர் தொண்டனான உனக்கு யாரும் மாலை மரியாதை செய்ய மாட்டார்களா?’ என்று கேட்டார் வாரியார்.

‘அதெப்படி... தலைவருக்குத்தான் மாலை மரியாதை செய்வாங்க; அதெல்லாம் தொண்டனுக்கு எப்படி கிடைக்கும்.....’ என்றார் அந்த அன்பர்.

உடனே, வாரியார், ‘எப்படி மாலை மரியாதையெல்லாம் உன் தலைவரைத் தவிர, தொண்டரான உனக்கில்லயோ, அதுபோலத்தான் அற்புத சக்தி, அருமை, பெருமையெல்லாம் என் தலைவர் திருநாவுக்கரசருக்கு மட்டும்தான் உண்டு. அவர் தொண்டானான எனக்கு அந்த சக்தி கிடையாது....’ என்று சொல்லவும், அந்த அன்பர் வாயடைந்து போய் உட்கார்ந்து விட்டார்.

சபையோர், தங்கள் கரவொலியால், வாரியாரின் வாக்கு சாதுர்யத்தை பாராட்டி மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கடந்த ௨௦௦௦யிரம் வருடமாக
வாக்கிய பஞ்சாங்கம்
நடைமுறையில் உள்ளது.
திருகணிதம் பஞ்சாங்கம்
கடந்த 400 வருடங்கள் மட்டுமே.
திருகணிதம் நடைமுறைக்கு 1965
ஆண்டுதான் மக்களிடம் வந்தது.
தயவுசெய்து சைவமக்கள்
இதை தெரிந்து கொள்ள வேண்யடிது
அவசியம்.

"இது கட்டணம்
அறவிடாத விளம்பரம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவை ச. சிறீரங்கன்




# திருச்செந்தூரில்

## செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் உரை

அறுபடைவீடுகளில் ஒன்றான திருச்செந்தூரில், ஐந்து நாட்களும், தினமும் இரவு 7 மணிக்கு திரு. ஆறுதிருமுருகன் ஆற்றிய உரைகளின் சுருக்கத்தை இங்கே எழுதுகின்றேன்.

ஆறுமுக நாவலருக்குப்பின்பதாக, எமது நாட்டின் புதல்வன் ஒருவர், இரண்டாவது தடவையாக தொடர் உரையாற்றியுள்ளார். இதனை நாங்கள் பாராட்டத்தவறின், சமயப்பணிக்குத் தீங்கு இழைத்தவர்களாவோம். இலங்கை, இலண்டன், கனடமா, மலேசியா, ஜேர்மனி, சிங்கப்பூர் என்று அலைகடலாக, தமிழகமக்களுடன், யாவரும், சங்கமிழ்திருந்தனர். 'விழிக்குத்துணை',

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



‘அன்பு’, அறம் ‘தேவசேனாபதி’ ஆகிய தலைப்புகளில், அவர் உரை அமைந்திருந்தது.

வெறுமனே சைவ சமயம்பற்றிப் பேசாது, அதனோடு இழையோடியிருக்கும் தத்துவக் கருத்துக்கள் பல, முத்துக்களாக அவர் வாயில் இருந்து சிதறின. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கடற்கரையே இருக்கும் மண்டபத்தில், முண்யடித்துக் கொண்டு, இவரது பேச்சைச் செவிமடுத்தனர். “உயிர்கள் எவ்வாறாயினும், அவற்றைத் துன்புறுத்தித் தீங்கு செய்தல் கூடாது. மனிதர்கள் மீதும், பறவை, விலங்குகள் மீதும் அன்பு காட்டுங்கள். முகம் மலரப் புன்னகை புரியுங்கள். கருணை காட்டுங்கள். முருகப் பெருமான் சூரனிடம் கருணை காட்டி, அவனைத் தன்னுடன் இணைத்தும் கொண்டார். தேவர்களுக்குக் கடுந்தீங்கு புரிந்தவனை முருகப்பெருமான் போர்புரிந்து, அவனின் கொட்டம் அடக்கி, கருணை காட்டினார்; சூரனை மன்னித்தார். இதுதான் கந்தபுராணத்தின் உள்ளடக்கம். மக்களாகிய நாங்கள் ஒருவரையும் வெறுக்காது, அறத்தை மேற்கொள்ள வேண்டும். அடுத்தவருக்கு எவ்வித துன்பமும், இழைத்தல் தவிர்ப்பது மாபெரும் அறமாகும். தொண்டு செய்தல், சமய சமூகப் பணிசெய்தல், இயலாதோருக்கு இயன்றோர் உதவிக்கரம் நீட்டல், முதியோரைப் புறக்கணியாது பராமரித்தல் என்பன அறத்தின் பாற்படும்‘ என்று அவர் உரையாற்றியபோது, ‘பக்தர்கள் கரவொலி எழுப்பினார்கள். கடல் அலையின் ஆர்ப்பரிப்பை மீறி, பக்தர்களின் கரவொலி அதிர்ந்தது என்றால் அது மிகையல்ல.

“உங்கள் சேய்நாடாகிய இலங்கையில் இருந்து வந்திருக்கிறேன். பலர் அங்கு துன்பப்படுவது உங்களுக்குத்தெரியும். அவர்களைத் துன்பப்பிடியில் இருந்து காப்பாற்றுங்கள். மிக நலிந்து, பொலிவிழந்து அங்கே மக்கள் வாடுகின்றனர். இரும்புக்கரப்பிடியில் துவள்கின்ற ஆண்களையும், ஏன் பெண்களையும் கூட, விடுவிக்க முருகப்பெருமானாகிய செந்தில்நாதன் அருளவேண்டும்.....” என்று அவர் குறிப்பிட்டபோது, பல பக்தர்களின் முகங்கள் வாடின. சிலர் கண்ணீர்த் துளிகளைத் தட்டி விட்டனர்.

தனது பிரசங்கத்தில் மகாத்மாகாந்தி, ஆபிரகாம் லிங்கன், வாரியார் சுவாமிகள் என்போரை மேற்கோள்காட்டினார். மண்டத்தே அமர்ந்திருந்த மக்கள் அனைவரையும் அவர் சிலையாக்கியே விட்டார். இவரின் பிரசங்கத்தை லண்டன் தமிழர் தகவல் ஆசிரியர் திரு. நா. சிவானந்தசோதி ஏற்பாடு செய்திருந்தார்.

இலங்கை தமிழர் நூற்றுக்கணக்கில் வந்திருந்தனர், அவர்கள் இவரின் பேச்சை செவிமடுத்தார்கள் என்று சொல்லமுடியாது. இந்த நிலை கவலைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றியத்துக்கு

## ஒரு விளக்கம்

1996ம் ஆண்டு நா. சச்சிதானந்தம் அவர்களால் சைவக் திருக்கோவில்கள் ஒன்றியம் தொடங்கப்பட்டது.

ஒன்றியக்கூட்டத்துக்கு விம்ல்டன் பிள்ளையார் கோயில் தலைவர் இரத்தின சிங்கம் கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். ஸ்ரோலி அம்மன் கோவில், ஆர்ச்வே, கனகதுர்க்கையம்மன் கோவில், சிவன் கோவில் உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். ஆக மொத்தம் ஐந்து கோயில்கள் தான் ஒன்றியத்தில் இருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் வாக்கிய பஞ்சாங்கம் தான் நாம் பின்பற்றக்கூடிய பஞ்சாங்கம் என தீர்மானம் இயற்றப்பட்டு வாக்கியபடி தான் எல்லாக் கோயில்களில் திருவிழா நடைப்பெற்றது. கடந்த 20 வருடமாக

லண்டன் சிவன் கோவில் ஆருத்திரா தரிசனம் சிதம்பரத்தில் நடைபெறும் போதுதான் இங்கும் நடைபெற்றது. ஆகவே 20 வருடங்களாக கணிதப் பஞ்சாங்கம் என பெரிய பொய் - ஒன்றை ஒன்றியம் இப்போது பொது மக்களுக்கு கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

23.11.1925  27.10.2015

## திரு. சின்னத்தம்பி பொன்னுத்துரை

தெல்லிப்பழையில் மகாஜனக் கல்லூரிக்கு அருகில் பிறந்து சுன்னாகம், லண்டன் ஆகிய இடங்களில் வசித்த, ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர் திரு. சின்னத்தம்பி பொன்னுத்துரை அவர்கள் தனது தொண்ணூறாவது வயதில் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம்.

அமரர் பொன்னுத்துரை அவர்கள் அதிபர் சினனப்பா காலத்து மகாஜனக் கல்லூரி மாணவனும் 40களின் இறுதியில் மகாஜனக் கல்லூரியின் சிலகாலம் Voluntary Teacher ஆகக் கடமைபுரிந்தவருமாவர். இவர் கல்லூரியின் ஆரம்பகால (40களின்)விளையாட்டு வீரர் அமரர் பொன்ராசாவின் அண்ணரும் பொற்கால (60/70களின்)விளையாட்டு வீரர்களான சமரக்கொடியின் பெரியதகப்பனும் ராஜகாந்தனின் மாமனும் ஆவார்.

அன்னார் திருமதி மனோரஞ்சிதத்தின் (ராசு) அன்புக் கணவரும், சாந்தினி (விவேகானந்தராஜா), குமுதினி (நித்தியானந்தசோதி), சாந்திக்குமார் (சுகந்தினி), உதயகுமார் (ராஜலோஜினி), சிவாஜினி (ஈஸ்வரவேல்), ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார்.

அமரர் பொன்னுத்துரை அவர்கள் காலம் சென்றவர்களான சின்னத்தம்பி-மாரிமுத்து தம்பதிகளின் மகனும் காலம்சென்றவர்களான தம்பையா-பாறுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டனில் பிரசித்திப்பெற்ற நிறுவனமான லைகா மொபைல்ஸ், தமிழ் நாட்டின் சென்னையிலும் தனது தொழில் முயற்சியை முன்னெடுத்து செல்கிறது என்பது நாம் அறிந்ததே. இந்த நிறுவனம் சமீபத்தில் சென்னையில் ஏற்பட்ட மழைவெள்ள நிவாரணத்திற்காக ரூ.5கோடியை நிதியாக வழங்கியிருப்பதாக அறிகிறோம். நம்மவர்களின் நல்ல உள்ளத்தை வாழ்த்துவோம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லாதோர்க்கு ஈவோம்!

# உலகிலே நற்பண்புகள் குறைவதற்குக் காரணம் என்ன?

புலவர் ஒருவர் பல இடங்களையும் பார்த்து வந்தார். நாடு, கடல், மலை, காடு என, பல இடங்களிலும் வாழும் மக்களை அவதானித்தார். அந்த மக்களின் குறிக்கோள் பொருளீட்டுவது மட்டுமே என்று கண்டார். அளவுக்கு மீறி அவர்கள் பொருட்செல்வத்திலே ஆசை கொள்கிறார்கள். அதனால், ஓடியோடிப் பொருளைத் தேடுகிறார்கள். தேடிய பொருளைச் சேர்த்து வைக்கிறார்கள். தேடிய பொருளை நல்லவழியிற் பயன்படுத்துவதில்லை என்பதை அந்தப் புலவர்; அவதானித்தார். மனிதர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு ஒரு வயிறுதான். அவர்கள் உண்பது ஒரு நாழி அளவுதான். உடுப்பதும் இடையில் ஒன்று, மேலே ஒன்று என இரண்டு துண்டுகள்தான். பல நாடுகளைத் தனதாக்கி ஆளும் அரசனாக இருந்தாலும், காட்டிலே மிருகங்களை வேட்டையாடுபவனாக, அறிவற்றவனாக இருந்தாலும் இவர்களெல்லாம் உண்பதும் உடுப்பதும் ஒரேயளவுதான். அப்படியிருந்தும் ஈட்டிய பொருளைத் தாமும் துய்க்காது, பிறருக்கும் கொடுக்காது சிலர் வாழ்கிறார்கள். அதனால் ஏழை, பணக்காரன் என்ற பேதம் வளருகிறது. பொறாமை, உயர்வு, தாழ்வு வளருகிறது. நற்பண்புகள் குறைகின்றன. எனவே அளவுக்கதிகமாகச் செல்வம் ஒருவரிடம் இருந்தால், அதை அற்றவர்களுக்கு அளிப்பது நல்லது என்பதே அந்தப் புலவரின் கருத்து. அந்தப் புலவர்தான் திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர். மதுரைக் கணக்காயனாரின் மைந்தர். இந்தக் கருத்தை அவர் இப்படித் தெரிவிக்கிறார்.

*தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி*
*வெண்குடை நீழற்றிய வொருமை யோர்க்கும்*
*நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்*
*கடுமாப் பார்க்கும் கல்லா வொருவர்க்கும்*
*உண்பது நாழி யுடுப்பவை யிரண்டே*
*பிறவு மெல்லா மோரொக் கும்மே*
*செல்வத்துப் பயனே யீதல்*
*துய்ப்பே மெனினே தப்புந பலவே*

– புறநானூறு 189

தருமியாக இருக்காது, கருமியாக இருந்து பாவங்களைத் தேடுகிறார்கள் இந்த மனிதர்கள். அதோடு பொருளற்றவர்களை வறுமையில் வாடவைத்துப் பாவங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆற்றத் தூண்டுகிறார்கள். 'தப்புந பல' என்றதில் இதுவும் அடங்கும்.

இல்லாதவர்களுக்கு, மிகவும் தேவையானபொழுது, காலம் அறிந்து கொடுப்பதுதான் ஈகை. மற்றவையெல்லாம் ஈகை அன்று. கடன் கொடுத்துப் பின்னர் அதைத் திருப்பி வாங்குவதுபோல என்பர்; திருவள்ளுவர்.

*வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்*
*குறியெதிர்ப்வீ ப நீர துடைத்து*

*குறள் 231*

தான் சேமித்த பொருளை ஒருவன் அநுபவிக்கவேண்டும். தன்னுடைய தேவைக்கு மேல் உள்ளதை மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அப்படி அநுபவிக்காது சேமித்துவைத்து, பின் இறந்து போவதால் எவ்வித பயனும் இல்லை. அவனை அறிவற்றவன் என்றே இந்த உலகம் இகழும். அவன் சேர்த்துவைத்த செல்வமும் அவனைப் பார்த்துச் சிரிக்கும். அருளும் அவனைப் பார்த்து நகைக்கும் என்கிறது நாலடியாரில் வரும் ஒரு பாடல்.

*துய்த்துக் கழியான் துறவோர்க்கொன் றீகலான்*
*வைத்துக் கழியும் மடவோனை வைத்த*
*பொருளும் அவனை நகுமே உலகத்*
*தருளும் அவனை நகும்.*
*- நாலடியார் 273*

தானும் அநுபவிக்காமல், துறவிகளுக்கும் கொடுக்காமல் பொருள் முழுவதையும் பதுக்கி வைத்து, பின் அது யாருக்கும் உதவாமற்போவதை என்னென்பது. 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்ற அடியையும் இங்கே நோக்கலாம்.

இல்வாழ்வில் உள்ள ஒருவனுடைய கடமை துறவிகள், ஏழைகள், நெறிமாறித் தம் வாழ்க்கையை இழந்தவர்கள் ஆகியோருக்கு உதவுவதே என்பதை நாம் நினைவிலே கொள்ளல் சாலச் சிறந்தது.

*துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்*
*இல்வாழ்வான் என்பான் துணை.*

*குறள் 52*

பொருளை ஈட்டுவோம். இல்லாதோர்க்கு ஈவோம். அருளைப் பெறுவோம். அதுவே நாம் வாழவேண்டிய நெறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி அளிக்கும்

## ஆனந்தமான பயணம்

தமிழ் நாட்டுக்கு வரும்போது

சிறந்த வாகன சேவையை உங்களுக்கு

தருவதற்கு ஆயத்தமாக உள்ளோம்.



தொடர்புக்கு :

**செல்வம்**

**தொலைபேசி எண்:**



**9788059977, 944175825**

---

பல வாசர்களின் வேண்டுக்கோளுக்கு ஏற்ப

தமிழகத்தில் உங்களுக்கு வேண்டிய எந்தப் புத்தகத்தை

ஒரு கிழமையில் பெற்றுத் தருகிறோம்

எங்களிடம் தற்சமயம் உள்ள புத்தகங்கள்

1. அபிராமி, அந்தாதி - கிவா. ஜகந்நாதன் உரையுடன்
2. அதிஷ்ட விஞ்ஞான - சேதுராமன்
3. கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்

10 பாகங்களுக்கு ஒரே புத்தகம்.



**தொடர்புக்கு:**

**தமிழர் தகவல்,**

**லண்டன்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டன் ஈஸ்ட்காம் முருகன்
கோவில் அறங்காவல்குழு
உறுப்பினர் திருமதி
லோகேஸ்வரி சிவசோதி
அவர்களின் 90ஆவது
அகவை அண்மையில்
முருகன் கோவிலில்
கொண்டாடப்பட்டது. எமது
வாழ்த்துகள்



அகவை அறுபதில்
சிவன் கோவில்
செயலாளர்
அருள்தாஸ்
அவர்களின்
பிறந்ததின விழா
லூசியம் சிவன்
கோவில் மண்டபத்தில்
27.12.2015இல்
கொண்டாடப் பட்டது.
எமது வாழ்த்துகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Best Food

11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100

364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323

259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677




எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும் அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று
மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்

நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANJAPPAR
Chettinad Indian Restaurant

ANJAPPAR CATERING

Menu



HIGH CLASS INDIAN VEGETARIAN AND
NON VEGETARIAN TAKE AWAY

JUST EAT

020 7438 20 23 - 0742 1763 518

www.anjappartakeaway.co.uk

admin@anjappartakeaway.co.uk

229, HIGH STREET NORTH, EAST HAM, E6 1JG | LONDON

Follow Us on

லூசியத்தில் முதலாவது தமிழ்க்கடை

கற்பகம்

தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்

KATPAKAM

உடன் காய்கறிகள், பழ வகைகள்
உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள்
அனைத்தும்ஒரே இடத்தில்






இப்பொழுது
விற்பனையில்...

36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 208 694 88 10

லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




STARRING : Surya, Amalapaul, Karthik Kumar, Bindu Madhavi - Music : ARROL CORELLI, Direction : PANDIRAJ

## FROM THU 24TH DEC - UK SHOW TIMES

**FROM THU 24TH DEC - CINEWORLD CINEMAS - DAILY SHOWS**

ILFORD, FELTHAM, WANDSWORTH, WEMBLEY, STAPLES, BBS, LIVERPOOL, STOCKPORT, SHEFFIELD
CARDIFF, BRADFORD, ENFIELD, BRISTOL, ASHFORD, ASHTON, CRAWLEY

ADVANCE BOOKING : HTTP://WWW.CINEWORLD.CO.UK OR CALL - 0871 220 1000

**FROM THU 24TH DEC @ HARROW SAFARI** - SAT 26TH DEC @11.00PM, SUN 27TH DEC @11.00PM

HTTP://WWW.SAFARICINEMA.COM/ OR CALL - 0208 426 03 03

**FROM THU 24TH DEC - DAILY SHOWS @ EASTHAM BOLYEON CINEMA**

THU 24TH DECEMBER @4.00PM-7.00PM-10.00PM
DAILY SHOWS : 2.00PM-5.00PM-8.00PM (FRI / SAT 10.00PM)

ADVANCE BOOKING - CALL - 020 8471 4884

**FROM THU 24TH DEC - PICCADILLY BIRMINGHAM - 372 STARTFORD ROAD, SPARKHILL, BIRMINGHAM, B114AB**

THU 24TH DEC @4.00PM-7.00PM-10.00PM, DAILY SHOWS : 2.00PM-5.00PM-8.00PM (FRI / SAT 10.00PM)

ADVANCE BOOKING - HTTP://WWW.PICCADILLYCINEMA.COM/ OR CALL - 012 1771 0421

**FROM THU 24TH DEC - PICCADILLY LEICESTER**

THU 24TH DEC @4.00PM-7.00PM-10.00PM, DAILY SHOWS : 2.00PM-5.00PM-8.00PM (FRI / SAT 10.00PM)

ADVANCE BOOKING : WWW.PICCADILLYCINEMAS.CO.UK / OR CALL - 0116 251 8880

**IRELAND - IMC SCREEN CINEMA, DUBLIN,** 29 LOWER GEORGES STREET, DUN LAOGHAIRE, CO DUBLIN, 01236 6662

FROM FRI 1ST JAN 2016 - DAILY SHOWS : 1.30PM-5.00PM-8.00PM (FRI / SAT :11.00PM)

**FROM FRI 1ST JAN 2016 - ODEON CINEMAS**

COVENTRY SKYDOME, LEEDS-BRADFORD, KINGSTON, MANCHESTER TRAFFORD CENTRE
BECKENHAM, EPSOM, NEWCASTLE EAST, SWANSEA, LEICESTER, WIMBLEDON, BLACKPOOL

WWW.ODEON.CO.UK OR CALL - 08712 244 007

SUBJECTED TO CHANGES IN SHOW TIMES WITHIN ADVERTISE PERIOD.

நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













நல்ல சோறு சாப்பிட வேண்டுமா AMIRTAA அரிசி வாங்குங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*ஆரெம்கேவியின் டிசைன் ஸ்டுடியோவில் கைதேர்ந்த நெசவாளர்களால்,
உரிமம் பெற்ற தொழில் நுட்பத்தில் (Patented* Techniques) உருவாக்கப்பட்ட உயர்ந்த படைப்புகள்.

சென்னை - ஃபோரம் விஜயா மால், வடபழனி,
ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி | பனகல் பார்க், தி.நகர்.
கோயம்புத்தூர் - ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு.
திருநெல்வேலி - வண்ணார்பேட்டை, வடக்கு ரத வீதீ, திருநெல்வேலி டவுண்.
பெங்களூரு - ஒரையன் மால்.

toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com

லண்டனில் முதல் தர பொன்னி அரிசி AMIRTAA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AMIRTAA FOODS

## STEAMED WHEAT FLOUR

## அவித்த கோதுமை மா

என்றும் நல்ல
பொருட்களை தேடி
வாங்குங்கள்

## அமிர்தா AMIRTAA




அவித்த கோதுமை மா
இப்பொழுது
லண்டனில்
அறிமுக விலையில்
விற்பனையாகிறது

**Katpakam**
Lewisham

**Prime Food & Wine**
Tooting

**Eelam Shop**
Catford

**இப்பொழுது விற்பனையில்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org